செய்தி வெளியீடு எண் : 41 நாள் :22.06.2020

**தேனி மாவட்டம்**
**கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு பணிகள் குறித்து**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

*****

தேனி மாவட்டம், கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு நடவடிக்கையாக, தேனி சுக்குவோடன்பட்டியில் தற்காலிகமாக செயல்பட்டு வரும் உழவர் சந்தை, மாவட்ட எல்லைப்பகுதியான ஆண்டிபட்டி கணவாய் வாகன சோதனை சாவடி மையம், தேனி-அல்லிநகரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அரசு மருத்துவமனையின் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.06.2020) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு நடவடிக்கையாக, தேனி சுக்குவோடன்பட்டியில் தற்காலிகமாக செயல்பட்டு வரும் உழவர் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள காய்கறி கடை உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் கட்டாயம் முககவசம் அணிவதோடு, முககவசங்கள் அணிந்து வருகைதருகின்ற பொதுமக்களுக்கு மட்டுமே காய்கறிகளை விநியோகம் செய்திட கடை உரிமையாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுரை வழங்கினார். மேலும், உழவர் சந்தையில் கூடுதலாக காய்கறி கடைகளை அமைதப்பதற்கு வியாபாரிகள் வைத்த கோரிக்கைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், உழவர் சந்தை உள் மற்றும் வெளிப்புறப்பகுதிகளில் சுகாதாரம் பேணப்படும் வகையில் குளோரின் பவுடரினை தெளித்திடவும், நுழைவு வாயில் போதிய குடிநீர், கிருமி நாசினி திரவம் போன்றவற்றை முறையாக வைத்திடவும் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, தேனி மாவட்ட எல்லை பகுதியான ஆண்டிபட்டி கணவாய் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாகன சோதனை சாவடி மையத்தில் பிற மண்டங்களிலிருந்து வருகை தருகின்ற வாகனங்கள் மற்றும் தேனி மாவட்டத்திலிருந்து பிற மண்டலங்களுக்கு செல்லக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கைகள், வாகனத்திற்கான அனுமதி சீட்டு மற்றும் சமூக இடைவெளியினை கடைபிடிப்பதன் அடிப்படையில் வாகனங்களில் பயணிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் அத்தியாவசிய பொருட்கள் கொண்டு செல்லும் வாகனங்களின் எண்ணிக்கைகள் தொடர்பாக பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், சுகாதாரத்துறையின் மூலம் வாகனத்தில் பயணிப்பவர்களுக்கு கொரோனா வைரஸ் காய்ச்சல் அறிகுறிகளுக்கான செய்யப்படும் மருத்துவ பரிசோதனை, கண்காணிப்பு பணிகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, பொதுமக்கள் மண்டலம் விட்டு மண்டலம் செல்லும் போது உரிய வாகன அனுமதி சீட்டு பெறப்பட்டு, அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு மேல் பயணம் மற்றும் மாற்று நபர்கள் பயணம் செய்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்திடவும், மேலும், வாகனங்களின் அனுமதி சீட்டு விதிமுறைகளை சரிவர கடைபிடிக்காத நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்து, வாகனங்களை பறிமுதல் செய்திட காவல் துறையினருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேனி-அல்லிநகரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள 100 படுக்கைகள் கொண்ட சிறப்பு பிரிவில், அறை வசதி, படுக்கை வசதி, மருத்துவ உபகரணங்கள், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்தும், அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை, மின் வசதி குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, மாவட்டத்தில் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து வரும் நபர்களின் மூலம் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகிறது. எனவே, பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள ஏதுவாக எந்த நிலையிலும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களை தயார் நிலையில் வைத்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, இ.ஆ.ப., தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையின் முதல்வர் இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் எஸ்.கவிதா, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) செந்தில்குமார், வீரபாண்டியன், மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் முத்துராஜ், சீனிவாசன், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**